**நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மதுரை மண்டலம், மதுரை**
**அவர்களின் நடவடிக்கைகள்**
**முன்னிலை : திரு.சு.ப.முகமது அலி, பி.இ.,எம்.பி.ஏ.,**

ந.க.எண். 1060 /2018, மம 3 , நாள்.14.9.2018.
திருவள்ளுவர் ஆண்டு 2049, விளம்பி வருடம், ஆவணி திங்கள் 29 -ஆம் நாள்.

பொருள் : அனுமதியற்ற மனைப்பிரிவுகள், மனைகள் வரன்முறைப்படுத்துதல் திட்டம் 2017 - நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம் - மதுரை மண்டலம் - திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் வட்டம், தாடிக்கொம்பு பேரூராட்சி/கிராமம், சர்வே எண்கள்.1829/2,1B-ல் 9.85 ஏக்கர் (39900 ச.மீ) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை (நிலை) எண்.78, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நவ4(3), நாள். 04.05.2017.
2. அரசாணை (நிலை) எண்.172, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நவ4(3), நாள். 13.10.2017 மற்றும் அரசாணை (நிலை) எண்.55, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நவ4(3), நாள். 2.5.2018
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை -02, அவர்களின் வழிகாட்டி நெறிமுறை ந.க.எண். 13193/2017/எல்ஏ2, நாள். 30.10.2017, 31.10.2017, 07.11.2017, 17.11.2017 மற்றும் 20.12.2017.
4. மனுதாரர் திரு.P.ஆறுமுகம் அவர்களின் விண்ணப்பம் எண். DTCP/L/0056550/2017 நாள். 26.2.2018.

*****

**உத்தரவு :**

பார்வை (1) மற்றும் (2)-ல் கண்ட அரசாணையின்படியும் பார்வை (3)-ல் கண்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படியும் பார்வை (4)-ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் வட்டம், தாடிக்கொம்பு பேரூராட்சி/கிராமம், சர்வே எண்கள்.1829/2,1B-ல் 9.85 ஏக்கர் (39900 ச.மீ) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு **ம.வ(மு)/ந.ஊ.து.இ(மம) எண்.526/2018** என எண்ணிடப்பட்டு கீழ்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| மனைப்பிரிவின் மொத்த பரப்பு | : 9.85 ஏக்கர் (39900 ச.மீ) |
| சமர்ப்பிக்கப்பட்ட வரைபடத்தின்படி மொத்த மனைகள் | : 278 எண்ணம். |
| ஒதுக்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | : 272 எண்ணம். |
| ஒதுக்கப்பட்ட மனை எண்கள் | : (1-7,10,11,15-199,200A,200-257,258(கி),258(மே), 259-274,275(கி),275(மே)) |
| மனுதாரர் உபயோகம் | : 3 எண்ணம் |

விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை : 246 எண்ணம்.

விற்கப்பட்ட மனை எண்கள் : (4-6,10,11,16,17,19-40,44-96,98-103,105-117, 120,123-170,172,175-199,200-218,220-249, 252-254,256,258(மே),259-274,275(கி))

விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை : 26 எண்ணம்.

விற்கப்படாத மனை எண்கள் : (1-3,7,15,18,41,42,43,97,104,118,119, 121,122,171,173,174,200A,219, 250,251,255,257,258(கி),275(மே))

திறவெளி ஒதுக்கீடு (OSR) இடத்தின் பரப்பு : 474.75 ச.மீ. (10.73 %)

**செலுத்தப்பட வேண்டிய கட்டண விபரம்**

**1. பரிசீலனைக் கட்டணம்**

| | |
|---|---|
| இணையதளம் வாயிலாக மனை ஒன்றிற்கு ரூ.500/- வீதம் பரிசீலனைக் கட்டணம் செலுத்திய மனை எண்களின் விபரம் | 1-3,7-9,12-15,18,41-43,97,104,118,119, 121,122,171,173,174,200A,219,250,251, 255,257,258(கி),275(மே)) |

பரிசீலனைக் கட்டணம் செலுத்தப்படாத மனைகளுக்கு அக்கட்டணத்தை இணையதளம் வாயிலாக செலுத்த வேண்டும்.

**2. வரன்முறைபடுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம்**

| ஒதுக்கப்பட்ட மனை எண்கள். | வரன்முறைப்படுத்தும் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு ரூ.30 /- வீதம்) | வளர்ச்சிக் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு ரூ.75 /-வீதம்) |
|---|---|---|
| 272 மனைகள் (1-7,10,11,15-199,200A,200-257, 258(கி),258(மே),259-274, 275(கி), 275(மே)) மனுதாரர் உபயோகம் 3 எண்ணம் | வரன்முறைப்படுத்தப்பட வேண்டிய ஒவ்வொரு மனைக்கும் சதுர மீட்டருக்கு ரூ.30/- வீதம் செலுத்தப்படல் வேண்டும். | வரன்முறைப்படுத்தப்பட வேண்டிய ஒவ்வொரு மனைக்கும் சதுர மீட்டருக்கு ரூ.75/- வீதம் செலுத்தப்படல் வேண்டும். |

மேற்காண் வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் இணைய தளம் வாயிலாகவும் அல்லது கீழ்க்கண்டவாறு நேரிலும் செலுத்தலாம்.

**(அ). வரன்முறைப்படுத்தும் கட்டணம் செலுத்துவதற்கான அரசு கணக்குத் தலைப்பு:**

| | |
|---|---|
| 0217.Urban Development - 60 Other Urban Development Scheme - 800. Other receipts AT Receipts under Regularisation charges of Unapproved layout and Plots - DTCP (DPC 0217 60 800 AT 0007) | சலான் மூலம் அரசு கருவுலத்தில் செலுத்தலாம். |

**(ஆ). வளர்ச்சிக் கட்டணம் கீழ்க்காண் உள்ளாட்சியின் வங்கிக் கணக்கில் நேரில் செலுத்தலாம்.**

வங்கியின் பெயர் மற்றும் கணக்கு எண் : உள்ளாட்சியில் பெற்று செலுத்தப்படல் வேண்டும்

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்பந்தப்பட்ட மனைகளுக்கு உள்ளாட்சியால் வரன்முறைப்படுத்தி ஆணை வழங்கப்படல் வேண்டும். விற்கப்படாத மனைகளைப் பொறுத்தமட்டில் அனைத்து மனைகளுக்கும் அல்லது முறைப்படுத்தக் கோரும் மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்பந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையைப் பெற்றுக் கொள்ளலாம்.

M 2

15

பார்வை (1) மற்றும் (2)-ல் சுட்டிய அரசாணைகளின்படி மேற்காண் கட்டணம் தவிர வேறு கட்டணம் ஏதும் உள்ளாட்சி வசூலித்தல் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நிபந்தனைகள்

1. அரசாணை (நிலை) எண்.172, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நவ4(3), நாள். 13.10.2017-ல் விதி எண். 7(g)(ii)-ன்படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.

2. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

3. ஒப்புதலளிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் முழுமையாக பின்பற்றப்படல் வேண்டும்.

கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்,
மதுரை மண்டலம்.

**இணைப்பு**
மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள்.

**பெறுநர்**
செயல் அலுவலர்,
தாடிக்கொம்பு பேரூராட்சி,
திண்டுக்கல் மாவட்டம்.

**நகல்**

| | |
|---|---|
| 1. திரு.P.ஆறுமுகம்,<br>50E/R.M. காலனி 8th கிராஸ்,<br>திண்டுக்கல் - 624001. | கடித நகல் மட்டும் |
| 2. உதவி இயக்குநர்,<br>நில அளவை பதிவேடுகள் துறை,<br>திண்டுக்கல் மாவட்டம். | சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு. |
| 3. சார் பதிவாளர்,<br>Joint-II சார்பதிவாளர்<br>அலுவலகம்,<br>திண்டுக்கல். | சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் பதிவு செய்யும் பொருட்டு. |
| 4. தொழில்நுட்ப வைப்பறை - | 1 வரைபடம். |

## தாடிக்கொம்பு பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்
### முன்னிலை : திரு.மு.சுதர்சன், பி.காம்.,

ந.க. எண் : **238/2018/ஆ** நாள்:**11.12.2018**

பொருள் : மனை வரன்முறை – திண்டுக்கல் மாவட்டம் – திண்டுக்கல் மேற்கு வட்டம் – தாடிக்கொம்பு பேரூராட்சி – தாடிக்கொம்பு கிராமம் சர்வே எண்கள் 1829/2 மற்றும் 1830/1Bல் 9.85ஏக்கர் (39900.00 ச.மீ) பரப்பளவில் அமைந்துள்ள அனுமதியற்ற 26 மனைகளை வரன்முறைப்படுத்தி ஆணையிடுதல் – தொடர்பாக.

பார்வை : 1.அரசாணை நிலை எண். 78, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை JUD4(3) நாள்.04.05.2017.
2.அரசாணை எண். 172, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை VD4(3) , நாள்.13.10.2017.
3. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மதுரை அவர்களின் கடிதம் எண். ந.க.எண். 1060/2018 மம3, நாள். 14.09.2018.
4.நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க. எண்.13193/2017–LA2, நாள். 31.10.2017 மற்றும் 07.11.2017.
5.திரு.ப.ஆறுமுகம், த/பெ பழனிவேல், என்பவரிடம் பெறப்பட்ட விண்ணப்பம் நாள். 05.12.2018.
6.தனி அலுவலர், தாடிக்கொம்பு பேரூராட்சி மன்ற தீர்மானம் எண்.256/2018, நாள். 27.09.2018.
7.திண்டுக்கல் கருவூலக செலுத்துச்சீட்டு நாள். 07.12.2018. மற்றும் பேங்க் ஆப் பரோடா வங்கி, திண்டுக்கல் கிளை, மின்னனு அஞ்சல் மூலம் பரிவர்த்தனை 07.12.2018ன்படி செலுத்தப்பட்டுள்ளது.

*****

உத்திரவு :

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் மேற்கு வட்டம், தாடிக்கொம்பு பேரூராட்சி, தாடிக்கொம்பு கிராமம் சர்வே எண்கள். 1829/2 மற்றும் 1830/1Bல் 9.85ஏக்கர் (39900.00 ச.மீ) பரப்பளவில் அமைந்துள்ள அனுமதியற்ற 26 மனைகளுக்கு பார்வை1 மற்றும் 2ல் காணும் அரசாணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்குட்பட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கி, பார்வை 3ல் காணும் கடிதத்தில் உத்திரவிடப்பட்டு பெறப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் பின்வரும் விபரப்படி 26 மனைகளை வரன்முறைப்படுத்தி தருமாறு பார்வை 5ல் காணும் கடிதத்தில் சம்மந்தப்பட்ட உரிமையாளரால் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், பார்வை 1 மற்றும் 2ல் கண்ட அரசாணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள விபரப்படி 26 மனைகளுக்கு பரிசீலனை கட்டணம் ரூ.13,000/– (ரூபாய் பதிமூன்றாயிரம் மட்டும்) இணையதள பதிவு எண்.DTCP/L/0056550/2017, நாள்.26.02.2018 மூலமாக பார்வை 3ல்காணும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மதுரை அவர்களின் கடிதத்தில் பெறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், 26 மனைகளுக்கு உரிய வரன்முறைக்கட்டணம் ரூ.1,02,000/– (ரூபாய் ஒரு இலட்சத்து இரண்டாயிரம் மட்டும்) திண்டுக்கல் மாவட்ட கருவூலக செலுத்து சீட்டு

நாள்.07.12.2018ன்படி திண்டுக்கல் பாரத மாநில வங்கி, நேருஜி நகர் கிளையில் அரசு கணக்கில் (கணக்கு எண். DPC021760800AT2730) செலுத்தப்பட்டுள்ளது.

மேலும், வளர்ச்சிக்கட்டணமாக ரூ. 2,55,000/– (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பத்து ஐந்தாயிரம் மட்டும்) செயல் அலுவலர், தாடிக்கொம்பு பேரூராட்சியின் உரிய வங்கி கணக்கிற்கு பேங்க் ஆப் பரோடா வங்கி, திண்டுக்கல் கிளை மூலம் மின்னனு அஞ்சல் மூலம் பரிவர்த்தனை 07.12.2018ன்படி செலுத்தப்பட்டுள்ளது.

<u>மனைப்பிரிவு விபரம்</u>

| வ. எண். | மனை எண். | புல எண். | சதுர மீட்டர் |
|---|---|---|---|
| 1 | 1 | 1829/2 மற்றும் 1830/1B | 304.24 |
| 2 | 2 | 1829/2 மற்றும் 1830/1B | 84.34 |
| 3 | 3 | 1829/2 மற்றும் 1830/1B | 108.03 |
| 4 | 7 | 1829/2 மற்றும் 1830/1B | 215.38 |
| 5 | 15 | 1829/2 மற்றும் 1830/1B | 96.64 |
| 6 | 18 | 1829/2 மற்றும் 1830/1B | 97.52 |
| 7 | 41 | 1829/2 மற்றும் 1830/1B | 170.77 |
| 8 | 42 | 1829/2 மற்றும் 1830/1B | 135.57 |
| 9 | 43 | 1829/2 மற்றும் 1830/1B | 117.93 |
| 10 | 97 | 1829/2 மற்றும் 1830/1B | 111.52 |
| 11 | 104 | 1829/2 மற்றும் 1830/1B | 111.52 |
| 12 | 118 | 1829/2 மற்றும் 1830/1B | 111.52 |
| 13 | 119 | 1829/2 மற்றும் 1830/1B | 111.52 |
| 14 | 121 | 1829/2 மற்றும் 1830/1B | 98.51 |
| 15 | 122 | 1829/2 மற்றும் 1830/1B | 87.36 |
| 16 | 171 | 1829/2 மற்றும் 1830/1B | 111.52 |
| 17 | 173 | 1829/2 மற்றும் 1830/1B | 69.70 |
| 18 | 174 | 1829/2 மற்றும் 1830/1B | 90.61 |
| 19 | 200A | 1829/2 மற்றும் 1830/1B | 90.59 |
| 20 | 219 | 1829/2 மற்றும் 1830/1B | 111.52 |
| 21 | 250 | 1829/2 மற்றும் 1830/1B | 92.00 |
| 22 | 251 | 1829/2 மற்றும் 1830/1B | 182.20 |
| 23 | 255 | 1829/2 மற்றும் 1830/1B | 173.93 |
| 24 | 257 | 1829/2 மற்றும் 1830/1B | 172.16 |
| 25 | 258E | 1829/2 மற்றும் 1830/1B | 168.79 |
| 26 | 275W | 1829/2 மற்றும் 1830/1B | 163.66 |

எனவே மேற்படி கட்டணங்கள் யாவும் பெறப்பட்டுள்ளதால் தாடிக்கொம்பு பேரூராட்சி சர்வே எண்களில் 1829/2 மற்றும் 1830/1Bல் அமைந்துள்ள மேற்கண்ட விபரப்படியான 26 மனைகளை மட்டும் வரன்முறைப்படுத்தி இதன்மூலம் ஆணையிடப்படுகிறது.

பார்வை 3ல் காணும் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள அனைத்து நிபந்தனைகளும் இதற்கு பொருந்தும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

செயல் அலுவலர்,
தாடிக்கொம்பு பேரூராட்சி

பெறுநர்

திரு ப.ஆறுமுகம்,
த/பெ. பழனிவேல்,
50E, R.M காலனி,
8வது தெரு, திண்டுக்கல்.

நகல் :
1. இயக்குநர், நகர் ஊரமைப்புத்துறை, சென்னை அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. துணை இயக்குநர், நகர் ஊரமைப்புத்துறை, மதுரை அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
3. திண்டுக்கல் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
4. இணை சார்பதிவாளர் II திண்டுக்கல் அவர்களுக்கு பணிந்து சமர்பிக்கப்படுகிறது.
5. உதவி இயக்குநர், நிலஅளவை மற்றும் பதிவேடுகள் துறை திண்டுக்கல் வட்டம் திண்டுக்கல்.
6. இருப்பு கோப்பிற்கு.